# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 11,757 — 1959 ජූනි 1 වැනි සඳුද — 1.6.1959**

**11,757 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு ஆனி மாதம் 1 ந் திகதி திங்கட்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்கள்) இராசசபைச் சட்டம், 1946

#### வாக்காளர் இடாப்புக்கள் திருத்தியமைத்தல் 1959

1949 ம் ஆண்டின் 48 ம் இலக்கமும் 1956 ம் ஆண்டின் 16 ம் இலக்கமும் 1959 ம் ஆண்டின் 11 ம் இலக்கமும் கொண்ட திருத்தச் சட்டங்களால் திருத்தப்பட்ட இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்கள்) இராசசபைச் சட்டத்தின் 16 ம் உட்பிரிவின்படி 1959 ம் ஆண்டுக்குரிய வாக்காளர் இடாப்புக்கள் திருத்தியமைத்தல் ஆரம்பமாகிவிட்டதென்று இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. தற்சமயம் நடைமுறையிலிருக்கும் வாக்காளர் இடாப்புக்களின் பிரதிகள் அல்லது அவற்றின் பிரிவுகள் பதிவு உத்தியோத்தர்களால் கீழ்க்காணும் கந்தோர்களில் பார்வைக்கு வைக்கப்படும் :—

| இடாப்புக்கள் அல்லது அவற்றின் பிரிவுகள் பார்வைக்கு வைக்கப்படும் கந்தோர்கள் | பார்வைக்கு வைக்கப்படும் இடாப்புக்கள் அல்லது அவற்றின் பிரிவுகள் |
|---|---|
| (1) ரெஜிஸ்திரார்-ஜெனரல் கந்தோர் .. .. | இல. 1—வட கொழும்பு, இல. 2—கொழும்பு மத்தி, இல. 3—தென் கொழும்பு, இல. 4—வெள்ளவத்தை-கல்கிசை ஆகிய தேர்தற் தொகுதிகளுக்குரிய சம்பூரண மான இடாப்புக்களின் பிரதிகள் |
| (2) கச்சேரி .. .. .. | இல. 1—கொழும்பு வடக்கு, இல. 2—கொழும்பு மத்தி, இல. 3—தென் கொழும்பு, இல. 4—வெள்ளவத்தை-கல்கிசை ஆகிய தேர்தற் தொகுதிகள் நீங்கலாக மற்றும் ஒவ்வொரு மாகாண அதிபரின் நிர்வாகத்துளடங்கிய எல்லா தேர்தற் தொகுதி களுக்குரிய சம்பூரணமான வாக்காளர் இடாப்புக்கள் |
| (3) ஒவ்வொரு தலதாபனக் கந்தோரும் .. | தலதாபனப் பகுதிக்குள்ளிருக்கும் எல்லா வாக்காளர்களினதும் பெயர்களடங்கிய இடாப்பின் பிரிவு |
| (4) ஒவ்வொரு கிராமத் தலைமைக்காரரின் கந்தோர் (கச்சேரி யிருக்கும் ஓர் பட்டினம், இல. 1—கொழும்பு வடக்கு, இல. 2—கொழும்பு மத்தி, இல. 3—தென் கொழும்பு, இல. 4—வெள்ளவத்தை-கல்கிசை ஆகிய தேர்தற் தொகுதிகள் தவிர) | கிராமத் தலைமைக்காரரின் பகுதிக்குளடங்கும் எல்லா வாக்காளர்களினதும் பெயர்க ளடங்கிய இடாப்பின் பிரிவு |

3. இல. 1—வட கொழும்பு, இல. 2—கொழும்பு மத்தி, இல. 3—தென் கொழும்பு, இல. 4—வெள்ளவத்தை-கல்கிசை ஆகிய தேர்தற் தொகுதிகளிலுள்ள வாக்காளராகத் தகுதியுடைய ஒவ்வொருவரும் தமது பெயர் வாக்காளர் இடாப்பில் பதியப்பட்டிருக்கிறதாவென்று ரெஜிஸ்திரார்-ஜெனரல் கந்தோரிலுள்ள இடாப்பை, கந்தோர் நேரத்தில், எப்பொழுதேனும் பரிசீலனை செய்தும் அல்லது சம்பந்தப்பட்ட தலதாபனக் கந்தோரி லுள்ள குறிப்பிட்ட பிரிவைப் பரிசீலனை செய்தும் நிச்சயப்படுத்திக்கொள்ளலாம். மேலும்,

வேறேதேனுமொரு தேர்தற் தொகுதியிலுள்ள வாக்காளராகத் தகுதியுடைய ஒவ்வொருவரும் தமது பெயர் வாக்காளர் இடாப்பில் பதியப்பட்டிருக்கிறதாவென்று சம்பந்தப்பட்ட கச்சேரியில் அல்லது சம்பந்தப்பட்ட தலதாபனக் கந்தோரில் அல்லது கிராமத் தலைமைக்காரரின் கந்தோரில் உள்ள குறிப்பிட்ட பிரிவைப் பரிசீலனை செய்து நிச்சயப்படுத்திக்கொள்ளலாம்.

4. வாக்காளர் இடாப்பை அல்லது அதன் பிரிவைப் பரிசீலனைசெய்து தமது பெயர் அவ்விடாப்பில் பதியப்படவில்லையெனக் காணும் ஒவ்வொருவரும் அங்ஙனம் தமது பெயரை இடுவிக்கும்படி கீழ்க்காணும் முறையில் விண்ணப்பித்துக்கொள்ளலாம்:—

(அ) இல. 1—வட கொழும்பு, இல. 2—கொழும்பு மத்தி, இல. 3—தென் கொழும்பு, இல. 4—வெள்ளவத்தை-கல்கிசை ஆகிய தேர்தற் தொகுதிகள் தொடர்பாக—

(1) இவ்வறிவித்தலோடிணைக்கப்பட்டிருக்கும் மாதிரிப் பத்திரத்திற்கிணங்க 1959 ம் ஆண்டு ஜூன் மாதம் 29 ந் திகதிக்கு முன் ரெஜிஸ்திரார்-ஜெனரலுக்கு எழுத்து மூலம் விண்ணப்பித்தும், அத்துடன்

(2) பதியப்படுதற்குத் தகுதியுடைய எல்லாத் தகவல்களையும் பதிவு உத்தியோகத்தரால் தமக்கு அனுப்பப்பட்ட விசேஷ பத்திரத்தின் மூலம் கொடுத்தும், இவ்வருட வாக்காளர் இடாப்புக்கள் திருத்தியமைத்தலின் பொருட்டு பதிவுக்குத் தகுதியுடையவரினதும், அல்லாதவரினதும், அல்லது இறந்துபோனவர்களினதும் பெயர்களை விசாரித்தறிய ஒவ்வொரு வீட்டுக்கும் வரும் கணக்கெடுப்பாளரிடம் அவ்விதத் தகவல்களைக் கொடுத்தும்,

(ஆ) மற்றும் தேர்தற் தொகுதித் தொடர்பாக—

(1) பதியப்படுதற்குத் தகுதியுடைய எல்லாத் தகவல்களையும் பதிவு உத்தியோகத்தரால் தமக்கு அனுப்பப்பட்ட விசேஷ பத்திரத்தின் மூலம் கொடுத்தும், 1959 ம் ஆண்டு ஜூன் மாதம் 29 ந் திகதிக்கு முன் தமது பகுதியிலுள்ள கிராமத் தலைமைக்காரரைச் சந்தித்து அவரிடம் அவ்விதத் தகவல்களைக் கொடுத்தும்,

(2) மேலும், இவ்வறிவித்தலோடு இணைக்கப்பட்டிருக்கும் மாதிரிப்பத்திரத்திற்கிணங்க 1959 ம் ஆண்டு ஜூன் மாதம் 29 ந் திகதிக்கு முன் அப்பகுதிக்குரிய பெரும்பாக இறைவரி உத்தியோகத்தருக்கு எழுத்துமூலம் விண்ணப்பித்தும்,

5. இடாப்புக்கள் அல்லது அவற்றின் பிரிவுகள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள எக்கந்தோர்களிலும், விண்ணப்ப மாதிரிப் பத்திரங்கள் கிடைக்கும்.

கொழும்பு,
1959 ம் ஞூ மே மீ 30 ந் வ.

ஈ. எவ். டயஸ் அபேசிங்க,
பாராளுமன்றத் தேர்தல் அதிகாரி.

**வாக்காளர் பதிவு விண்ணப்பப் பத்திரம், 1959**

ரெஜிஸ்திரார்-ஜெனரல் அவர்கட்கு,

————பெரும்பாக இறைவரி மாவட்ட உத்தியோகத்தருக்கு.

———— ஆகிய நான் ———— தேர்தற் தொகுதியில் ஓர் வாக்காளராகப் பதிவு செய்துகொள்ள இத்தால் விண்ணப்பித்துக்கொள்கின்றேன். எனது விண்ணப்பத்திற்கு ஆதாரமாகக் கீழ்க்காணும் விபரங்கள் தரப்பட்டுள்ளன :—

(1) முழுப் பெயர் : ————.

(2) விலாசம் : ————.

(3) வயது : ————.

(4) தேர்தற் தொகுதியில் வாசஞ்செய்யத் தொடங்கிய திகதி, அங்ஙனம் வாசஞ்செய்த காலம் :————.

————,
மனுதாரின் ஒப்பம்.

திகதி : ————.